GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

FA6A

5605–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five – year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss about the financial relations between the Central and State Governments.

   நடுவன் மற்றும் மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதிப் பங்கீட்டு உறவுகளைப் பற்றி விவாதிக்க.

2. Examine the scope of Article 356 after Bommai's case.

   பொம்மை வழக்கிற்கு பிந்தைய உறுபு 356-ன் நோக்கெல்லையை ஆய்வு செய்க.

3. Examine the doctrine of pith and substance as laid down by the Indian Supreme Court.

   இந்திய உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள 'மையக்கருப்பொருள் கோட்பாட்டை'-ப் பற்றி ஆய்வு செய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Enumerate the powers of the President of India.

   இந்திய குடியரசுத் தலைவரின் அதிகாரங்களைப் பட்டியலிடுக.

5. Briefly discuss about the jurisdiction of the Supreme Court.

   உச்ச நீதிமன்றத்தின் நீதி வரம்பெல்லையைப் பற்றி சுருக்கமாக விவாதிக்கவும்.

6. Narrate the present state of Art 370 of the Constitution.

   அரசியலமைப்புச் சட்டத்தின் உறுபு 370-ன் தற்போதைய நிலையை விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Writ of Quo Warranto.

தகுதி வினவும் நீதிப்பேராணை.

(b) Composition of Rajya Sabha.

ராஜ்ய சபாவின் கட்டமைப்பு.

(c) Single member bill.

தனி நபர் சட்ட முன்வடிவு.

(d) Vote on account.

இடைக்கால மானிய கோரிக்கை.

(e) Comptroller and Auditor General of India.

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர்.

(f) Article 368.

உறுபு 368.

(g) Trade and Commerce Rights.

தொழில் மற்றும் வணிக உரிமைகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Government of India entered into a treaty with USA on a subject matter which is in the State List under the Indian Constitution. Decide on the Constitutional validity of the treaty entered into by the Union Government.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மாநில பட்டியலில் உள்ள ஒரு பொருளின் மீது இந்திய அரசு அமெரிக்க நாட்டுடன் ஒரு உடன்படிக்கையில் கையொப்பம் இடுகிறது. இந்திய அரசு செய்துள்ள இவ்வுடன்படிக்கை அரசமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதா என்பதை முடிவு செய்க.

9. Mr. X was elected to the state legislative assembly as MLA representing a political party. Later he was expelled from the party. Later he joined another political party. Is he disqualified under the tenth schedule of the Indian Constitution. Decide.

திரு. X என்பவர் ஒரு அரசியல் கட்சி சார்பாக சட்ட சபைக்கு சட்ட மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். பின்னர் அவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். பின்னர் அவர் வேறு ஒரு அரசியல் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பத்தாம் அட்டவணையின் கீழ் தகுதி இழந்தவரா? தீர்மானிக்கவும்.

10. A State in India enacted a law to limit the rate of interest recoverable by money lenders on any loan. RBI challenged the validity of the law on the ground that the matter is related to ‘Promissory–Notes’, a central subject. Decide the validity of the State law.

ஒரு மாநில அரசானது கடன் தொகை பெறுபவர்களிடமிருந்து பெறப்படும் கடனுக்கான வட்டி விழுக்காட்டை குறைப்பதற்காக ஒரு சட்டத்தை இயற்றியது. இந்திய ரிசர்வ் வங்கி இந்தச் சட்டத்தின் செல்லுந்தன்மையை வினவி இது மத்திய பட்டியலில் உள்ள கடனுறுதிச் சீட்டு தொடர்புடையது என எதிர்ப்பு தெரிவித்தது. மாநில அரசு இயற்றி இருக்கும் சட்டத்தின் செல்லுந்தன்மையை முடிவு செய்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT
LIBRARY

Register No.

**FA6B**

**5685–23**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five – Year Regular Course)

Third Year – Sixth Semester

COMPANY LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the different kinds of company and differentiate between private and public company.

   நிறுவனத்தின் பல்வேறு வகைகளைக் கூறி, தனியார் நிறுவனத்தையும் பொது நிறுவனத்தையும் வேறுபடுத்துக.

2. Examine the legal provisions relating to Alteration and capital clause.

   மூலதனப் பகுதியை மாற்றுவது தொடர்பான சட்ட வகைமுறையை ஆராய்க.

3. Enumerate the different kinds of meeting as contemplated under the Companies Act.

   நிறுவனச் சட்டத்தின் கீழ் உள்ள கூறப்பட்டுள்ள பல்வேறு வகையான சட்டங்களைப் பற்றிக் கூறுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Describe the different kinds of debentures and point out the rights of a debenture holder.

   பலவகைப்பட்ட கடனீட்டுப் பத்திரங்களை விளக்கி கடனீட்டுப் பத்திரதாரரின் உரிமைகளைக் குறிப்பிடுக.

5. What is meant by transfer of shares? What are the provisions for transferring shares?

   பங்கு மாற்றம் என்பதன் பொருள் யாது? பங்குகளை மாற்றுவதற்குண்டான வகைமுறைகள் யாவை?

6. State the restrictions imposed on the choice of a name for a limited company and the modes to change such name?

வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனம் பெயரைத் தேர்ந்தெடுப்பதின் மீது சுமத்ததப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும் அப்பெயரை மாற்றம் செய்யும் முறைகளையும் கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) National Company Law Tribunal

தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம்

(b) Voluntary winding up

தன்விருப்பத்தினால் கலைத்தல்

(c) Auditor

தணிக்கையாளர்

(d) Dividend

பங்காதாயம்

(e) Share certificate

பங்குச் சான்றிதழ்

(f) Kotla Venkatasamy V. Ramamurthy

கோட்லா வெங்கடசாமி எதிர் ராமமூர்த்தி

(g) Certificate of Incorporation

நிறுவன பதிவுச் சான்றிதழ்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A company was incorporated with the object of protecting and promoting users of cycles and tricyles on public roads. The company altered its objects clause and extended the protection to the users of all vehicles including motor cars. Is the alteration valid?

இரண்டு சக்கர மிதி வண்டிகளையும் மூன்று சக்கர மிதி வண்டிகளையும் பொது சாலைகளில் பயன்படுத்துபவர்களைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் கருத்தில் கொண்டு ஒரு நிறுவனம் நிறுவப்பட்டது. மோட்டார் கார்கள் உள்பட எல்லா வகை வண்டிகளைப் பயன்படுத்துவோர்களின் பாதுகாப்பையும் உள்ளடக்கி, அந்த பங்கமைப்பின் நோக்கம் பற்றிய விதிக் கூறு மாற்றப்பட்டது. இந்த மாறுதல் செல்லத்தக்கதா?

9. The Company's Secretary who had forged the signature of two directors and affixed the forged seal of the company issued a share certificate whether the company is bound by the share certificate?

நிறுவனத்தின் செயலர் இரண்டு இயக்குனர்களின் கையொப்பத்தையும் பொய்யாக இட்டு, நிறுவனத்தின் முத்திரையையும் பொய்யாக பதித்து பங்குச் சான்றிதழை வழங்கினார். இச்சான்றிதழக்கு நிறுவனம் பொறுப்பாகுமா?

10. A member of a company becomes insolvent. Whether the person can continue as a member of the company?

ஒரு நிறுமத்தின் உறுப்பினர் நொடிப்பு நிலையானார். அவர் அந்த நிறுமத்தின் உறுப்பினராக இருக்க முடியுமா?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

FA6C

5686-23

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five – year Regular Course)

Third Year – Sixth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically examine the powers of the government to refer an industrial dispute for adjudication.

   தொழிற்துறை தகராறுகளை கட்டாய தீர்ப்பு முறைக்கு சாட்டி அனுப்புதலுக்கான அரசின் அதிகாரத்தை கூர்ந்தாய்வு செய்க.

2. State the salient features of Industrial Employment (Standing Orders) Act, 1946.

   1946–ம் ஆண்டு தொழிற்சாலை பணிகள் (நிலையாணை) சட்டத்தின் சிறப்பு அம்சங்களைக் கூறுக.

3. Explain the provisions relating to conciliation officers and Board of conciliation under the Industrial Disputes Act 1947 and describe the nature of their powers and duties.

   சமரச அலுவலர் மற்றும் சமரச வாரியம் சம்பந்தமாக தொழிற்சாலை தகராறுகள் சட்டம் 1947–ல் உள்ள சட்டப் பிரிவுகளை விளக்குக. அவர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளின் தன்மையை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. To what extent the provisions relating to voluntary reference of industrial dispute to arbitration are effective under Industrial Disputes Act 1947?

   1947 ஆண்டு தொழிற்துறை சச்சரவுகள் சட்டத்தின் கீழ் தொழிற்துறை சச்சரவுகளை இசைவுத் தீர்விற்கு அனுப்புதல் தொடர்பான சட்ட வகையங்கள் எவ்வளவுக்கு முனைப்புடன் உள்ளன?

5. Examine the provisions relating to Authorised deductions under the Payment of Wages Act 1936.

1936ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தில் நியாயமான பிடித்தங்கள் குறித்த வகையங்களை ஆராய்க.

6. Explain the salient features of Minimum Wages Act 1948.

1948–ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் சிறப்பு அம்சங்களைக் விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

(a) Disciplinary Procceding

ஒழுங்கு நடவடிக்கை

(b) Define Trade Union

தொழிற்சங்கம் வரையறை

(c) Duties and powers of certifying officer

சான்றளிக்கும் அதிகாரியின் கடமைகளும் அதிகாரமும்

(d) Closure

நிரந்தரமாக மூடுதல்

(e) Recognition of Trade Union

தொழிற்சங்கத்தின் அங்கீகாரம்

(f) Wage Board

ஊதிய வாரியம்

(g) Industry

தொழில்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A trade union sent an application for registration to the Registrar of Trade Union in a proper manner. No action was taken on the application for more than three months. Is there any remedy to the Union?

ஒரு தொழிற்சங்கம் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பத்தினை உரிய முறையில் தொழிற்சங்க பதிவாளருக்கு அனுப்பி வைத்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் அந்த விண்ணப்பத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்தொழிற்சங்கத்திற்கு ஏதேனும் தீர்வழி உண்டா?

9. In a Chemical industry the employer declared lay off to his workers. But offered them alternative employment in his industry situated at 3 km away from the main industry. The workers refused to accept the work and claimed compensation for lay off. Decide.

ஒரு இரசாயன தொழிற்சாலையில் நிர்வாகம் தனது தொழிலாளர்களை வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. அதற்கு பதிலாக நிர்வாகம் சுமார் 3 கி.மீ. தொலைவில் இருக்கும் தனது மற்றொரு தொழிற்சாலையில் வேலை செய்ய பணிக்கிறார். ஆனால் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாது என்று கூறி நிறுத்திவைத்தலுக்கான இழப்பீடு கோருகின்றார்கள். முடிவு செய்க.

10. Under the Certified standing order of the company, show cause notice to worker is mandatory while transferring a worker. Later, management entered into an agreement with the worker's union. It was agreed that no show cause notice is required Mr. Thamizselvan was transferred without show cause notice. Is it Valid?

சான்றிட்ட நிலையாணை விதிகளின்படி, பணியாளர் பணியிடமாற்றத்திற்கு காரணம் கோரும் அறிவிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பின்னர் தொழிற்சங்கத்துடன் ஏற்பட்ட உடன்படிக்கையில் அது தேவையில்லை என்று ஒப்புகொள்ளப்பட்டது. திரு. தமிழ்ச்செல்வன் என்ற பணியாளர் காரணம் கோரும் அறிவிப்பு இல்லாமல் பணியிடமாற்றம் செய்யப்படுகின்றார். அது செல்லுமா?

---